# ஒரு பார்வை - பகுதி 1

இங்கு அல்லாஹ் அவன் விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுப்பதும், அவன் விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கி விடுவதும் பற்றி கூறப்பட்டுள்ளது. மேலும் மரியம் (அலை) வரலாற்றில் ஈஸா (அலை) அவர்களின் அற்புதப் பிறப்பையும் விவரிக்கிறது. பிற்காலத்தில் அல்லாஹ்வின் நாட்டப்படி, ஈஸா (அலை) செய்து காட்டிய அற்புதங்களையும், இஸ்ரவேலர்களின் ஒரு சாரார் ஈஸா (அலை) அவர்களை நிராகரிப்பதையும், அல்லாஹ் அவர்களின் கொலை செய்யும் சதித் திட்டத்திலிருந்து ஈஸா (அலை) அவர்களை பாதுகாத்ததையும் குறிப்பிடுகிறான்.

## தராவிஹ் - 3: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 21 - 54; பிரிவு: 3 - 5

1. ‘எங்கள் அல்லாஹ்வே! சகல தேசங்களுக்கும் அதிபதியே! நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கிறாய். நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கி விடுகிறாய். நீ விரும்பியவர்களை கண்ணியப்படுத்துகின்றாய். நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகின்றாய். நன்மைகள் யாவும் உன்கையில் இருக்கின்றன. நிச்சயமாக, நீ யாவற்றின் மீதும் பேராற்றல் உடையவன்’. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 3)

2. அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களையும், நூஹ் (அலை) அவர்களையும், இப்ராஹீம் (அலை) குடும்பத்தையும், இம்ரான் (அலை) குடும்பத்தையும் உலகத்தாரில் மேலானவர்களாக தேர்ந்தெடுத்தான். (இம்ரான் (அலை) அவர்கள் மரியம் (அலை) அவர்களின் தந்தையும், நபி ஈஸா (அலை) அவர்களின் பாட்டனாரும் ஆவார்). (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 4)

3. இம்ரான் (அலை) மனைவி, தன் கர்ப்பத்திலுள்ள குழந்தையை அல்லாஹ்றவின் சேவைக்கு தியாகம் செய்தார். அந்த குழந்தை தான் மரியம் (அலை). (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 4)

4. மேலும் இம்ரான் (அலை) மனைவி அல்லாஹ்றவிடம், “அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்; இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானின் தீங்குகளிலிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன்", என வேண்டினார். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 4)

5. மலக்குகள் மரியம் (அலை) அவர்களிடம், ‘நிச்சயமாக அல்லாஹ்ற உம்மைத் தேர்ந்தெடுத்து இருக்கிறான். உம்மை பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கிறான். உலகத்திலுள்ள பெண்கள் யாவரையும் விட, உம்மை மேன்மையாக்கியும் வைத்திருக்கிறான்’, என்றனர். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

6. மரியம் (அலை) அவர்களை நோக்கி மலக்குகள், ‘மரியமே! நிச்சயமாக அல்லாஹ்ற தன்னுடைய அருளால் உமக்கு ஈஸா என்ற மகனை கொடுக்கிறான்’. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

7. அதற்கு மரியம் (அலை), “என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?”, எனக் கேட்டார். (அதற்கு) மலக்குகள்: “அப்படித்தான் அல்லாஹ்ற தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனை (குன்) “ஆகுக” எனக் கூறுகிறான், உடனே அது (பயக்கூன்) ஆகி விடுகிறது”. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

8. பின்னர் ஈஸா (அலை) அவர்கள் இஸ்ராயீல் சந்ததிகளிடம், 'நிச்சயமாக நான் இறைவனிடம் இருந்து அனுப்பபட்ட தூதுவன். அதற்காக ஒரு அத்தாட்சியை கொண்டு வந்திருக்கிறேன். உங்களுக்காக களிமண்ணிலிருந்து ஒரு பறவை செய்து, ஊதுவேன். அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு அது பறக்கும் பறவையாகி விடும். பிறவிக் குருடனையும், வெண் குஷ்டரோகியையும் நான் குணப்படுத்துவேன். அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இறந்தவரை உயிர்ப்பிப்பேன். நீங்கள் உண்டவைகளையும், வீட்டில் சேகரித்து வைத்ததையும் நான் உங்களுக்கு அறிவிப்பேன். இதற்கு முன் வந்த தவ்ராத்தையும் நான் உண்மைப் படுத்துகிறேன்', என்றார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

9. அவர்களில் ஒரு சாரார் தம்மை நிராகரிப்பதை ஈஸா (அலை) உணர்ந்த போது: "அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவி செய்பவர்கள் யார்?" என்று அவர் கேட்டார். ஈஸா (அலை) சீடர்கள், 'நாங்கள் அல்லாஹ்விற்காக உமக்கு உதவி செய்கின்றோம். உண்மையாக நாங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றோம். அதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்', என்றனர். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

10. ஆனால் ஈஸா (அலை) அவர்களை நிராகரித்த பலர், அவரை கொலை செய்ய சதி செய்தார்கள். ஆனால் அல்லாஹ், அவர்களுக்கு சதி செய்து விட்டான். அல்லாஹ் சதி செய்பவர்களை மிகைத்தவன். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 2

**ஈஸா (அலை) அவர்கள், ஆதமை (அலை) போன்றவர். அல்லாஹ் அவர்களை தந்தை இல்லாமல் படைத்தான். இப்ராஹிம் (அலை) அவர்கள் ஒரு யூதரோ அல்லது கிறிஸ்தவரோ இல்லை; அவர்கள் ஒரு உண்மையான முஸ்லிம். உண்மையான விசுவாசிகள் அல்லாஹ்வின் அனைத்து நபிமார்களையும் நம்புகிறார்கள். அவநம்பிக்கையுடைய காஃபிர்களுக்கு கடுமையான தண்டனை காத்திருக்கிறது.**

## தராவிஹ் - 3: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 55 - 91; பிரிவு: 6 - 9

1. **அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களை நோக்கி கூறியதாவது: 'ஈஸாவே! நிச்சயமாக நான் உமக்கு உம் ஆயுளை பூர்த்தி செய்து, உம்மை நம்மளவில் உயர்த்திக் கொள்வேன்'. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 6)**

2. **ஈஸா (அலை) அவர்கள், ஆதமை (அலை) போன்றவர். அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களை தந்தை இல்லாமல், மரியம் (அலை) வயிற்றில் உருவாக்கினான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 6)**

3. **அவநம்பிக்கையுடையவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களை யூதரா, கிறிஸ்தவரா என வீணாக தர்க்கம் செய்கிறார்கள். தவ்ராத்தும், இன்ஜீலும் அவருக்கு வெகுகாலத்திற்குப் பின்னரே அருளப்பட்டது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 7)**

4. **இப்ராஹீம் (அலை) அவர்கள் ஒரு உண்மையான முஸ்லிம், அல்லாஹ்வை முற்றிலும் வழிபட்டவர். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 7)**

5. நபியே நீர் கூறும், ‘அல்லாஹ்வையும், நம் மீது அருளப்பட்டதையும், இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை), யாகூப் (அலை) ஆகியோர் மீதும், அவர்கள் சந்ததிகள் மீதும் அருளப்பட்டதையும், மூஸா (அலை), ஈஸா (அலை) முதலிய மற்ற நபிமார்களுக்கு அளிக்கப்பட்டதையும் நாம் விசுவாசிக்கின்றோம். அல்லாஹ் ஒருவனுக்கே நாங்கள் கீழ்ப்படிந்து நடப்போம்’. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 9)

6. எவர்கள் நிராகரித்து அதன்படியே இறந்து விடுகிறார்களோ, அவர்கள் இப்பூமி நிறைய பொன் இருந்து அதனை ஈடாக கொடுத்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்படாது. அவர்களுக்கு மிகத் துன்புறுத்தும் வேதனையுண்டு. இவர்களுக்கு உதவி செய்வோர் ஒருவரும் கிடையாது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 9)

## ஒரு பார்வை - பகுதி 3

**நம்பிக்கையாளர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களின் உண்மையான மார்க்கத்தை பின்பற்ற வேண்டும்; ஒற்றுமையாக இருக்க வேண்டும்; இறைவனின் நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும். விசுவாசிகள்தான், மனிதர்களில் மிக்க மேலானவர்கள். பத்ர் மற்றும் உஹது போர்களை குறிப்பிட்டு வெற்றியும், தோல்வியும் அல்லாஹ்வின் மூலமாகத்தான் வரும் என்பதை வலியுறுத்துகிறது.**

## தராவிஹ் - 3: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 92 - 129; பிரிவு: 10 - 13

1. **அல்லாஹ் உண்மையையே கூறுகிறான். நபி இப்ராஹீமுடைய மார்க்கத்தை பின்பற்றுங்கள். அவர் இணைவைப்பவராக இல்லை. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 10)**

2. **இவ்வுலகில், இறைவனை வணங்குவதற்கு மனிதர்களுக்கு அமைக்கப் பெற்ற ஆலயங்களில் முதன்மையானது மக்காவிலுள்ள ஹரம் ஷரீப். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 10)**

3. **நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். மேலும், முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள். நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய வேதமாகிய கயிற்றை பலமாக பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடவேண்டாம். உங்கள் இதயங்களுக்குள் இஸ்லாம் என்னும் அன்பை ஊட்டி, உங்களை சகோதரர்களாக்கினான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 11)**

4. **எவர்கள் மக்களை நன்மையின்பால் அழைத்து அதனைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து**

விலகுவார்களோ, அவர்களே வெற்றியாளர்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 11)

5. விசுவாசிகள்தான், மனிதர்களில் மிக்க மேலானவர்கள். அவர்கள் நன்மையை ஏவி, தீமையை தடுக்கின்றனர். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 12)

6. உஹது போரில் நபிகளாரின் இரண்டு படை பிரிவினர் தைரியம் இழந்து 'ஓடி விடலாமா' என்று நினைத்தனர். (நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை தனது 300 படை வீரர்களுடன் முஸ்லிம் படையில் இருந்து வெளியேறி, நபிகளாரை ஏமாற்றிவிட்டான். அப்போது நபி (ஸல்) அவர்களிடமிருந்த அவ்ஸ் மற்றும் கஸ்ராஜ் படை பிரிவுகள் போரிட தயங்கின. அப்போது முஸ்லீம்கள் 700 பேர் மட்டுமே இருந்தனர். ஆனால் எதிரிகள் 3000 பேர் இருந்தனர்). (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

7. அல்லாஹ் அவ்விரு பிரிவினருக்கும் (உதவி செய்து) காப்போனாக இருந்தான். ஆகவே முஃமின்கள் அல்லாஹ்விடத்திலேயே முழு நம்பிக்கை வைக்கவேண்டும். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

8. பத்ர் போரில், நபிகள் நாயகம் படைகள் குறைவாக இருந்தபோதும், அல்லாஹ் மலக்குகளை அனுப்பி உதவி புரிந்து, வெற்றியடையச் செய்தான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

9. அந்த போர் சமயத்தில் நபிகள் நாயகம் தமது ஸஹாபா படை வீரர்களை உற்சாகப்படுத்த, "உங்கள் ரப்பு (வானிலிருந்து) இறக்கப்பட்ட மூவாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு உதவி செய்வது உங்களுக்குப் போதாதா?" என்று வினவினார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

10. மேலும் நாயகம், தமது சஹாபாக்களிடம் கூறியதாவது, 'நீங்கள் பொறுமையுடன் இருந்து, அல்லாஹ்வை வழிபட்டால்,

3000 என்ன, 5000 மலக்குகளை அனுப்பி உங்களுக்கு உதவி புரிவான்'. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

11. இது அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியாகவும், நிம்மதியாகவும் இருந்தது. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். அல்லாஹ் உங்களுக்கு வெற்றிக் கனியை அளிப்பான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 13)

## ஒரு பார்வை - பகுதி 4

அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படியுங்கள். சோதனைகளின்போது பொறுமையுடன், உறுதியாக இருங்கள். உஹத் போரில் அம்பெய்யும் வீரர்கள் சிலர் உலகப்பொருட்களுக்கு ஆசைப்பட்டு மாறு செய்ததால் தோல்வியில் முடிந்தது என்பதை நினைவூட்டுகிறது. ஆனால் அல்லாஹ் விசுவாசிகளை மன்னித்து, இந்த அனுபவத்தின் மூலம் அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தினான்.

## தராவிஹ் - 3: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 130 - 164; பிரிவு: 14 - 17

1. அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படியுங்கள். நீங்கள் அதனால் அல்லாஹ்வினால் கிருபை செய்யப்படுவீர்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 14)

2. குர்ஆன் மனிதர்களுக்கு (சத்தியத்தின்) தெளிவான விளக்கமாகவும், பயபக்தியுடையோருக்கு நேர் வழிகாட்டியாகவும், நற்போதனையாகவும் இருக்கின்றது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 14)

3. நீங்கள் தைரியத்தை இழந்து விட வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம். விசுவாசம் கொண்டவர்கள்தான் மேன்மை அடைவார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 14)

4. அல்லாஹ்வின் பரிசோதனைக்கு முன்பாக, யாரும் சொர்க்கம் செல்ல முடியாது. அல்லாஹ்விற்காக வாழ்பவர்களும், அவனுக்காக கஷ்டங்களை சகித்துக் கொண்டவர்களுமே மேன்மை அடைவார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 14)

5. உஹத் போரில், உங்களுக்கு வெற்றியை காண்பித்ததன் பின்னும், உங்களில் சிலர் உலகப்பொருட்களுக்கு ஆசைப்பட்டு மாறு செய்தனர். உங்களில் இவ்வுலகை விரும்புவோரும்

உண்டு. மறுமையை விரும்புவோரும் உண்டு. (நபி (ஸல்) அவர்கள், உஹுத் மலைக் கணவாயில் சுமார் 50 அம்பெய்யும் வீரர்களை காவலுக்காக நிறுத்தியிருந்தார்கள். ஆனால் அவர்கள் கீழே போர்ச் செல்வங்களை பார்த்தபின், சுமார் 40 வீரர்கள் கீழே இறங்கிவிட்டனர்). (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 16)

6. ஆகவே உங்களைச் சோதிக்கும் பொருட்டு பின்னடையும்படி செய்தான். நிச்சயமாக அவன் உங்களை மன்னித்தான். மேலும் அல்லாஹ் முஃமின்களிடம் அருள் பொழிபவனாகவே இருக்கின்றான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 16)

7. யுத்தத்தில் நபிகள் நாயகம் உங்களை அழைத்த போது, நீங்கள் ஒருவரையுமே திரும்பிப் பாராது, வெருண்டோடிக் கொண்டிருந்தீர்கள். ஆதலால் உங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க, அல்லாஹ் தோல்வியைக் கொடுத்தான். உங்களுக்கு கிடைக்க வேண்டியது தவறியது. அதன் மூலம் உங்களுக்கு சகிப்புத்தன்மையையும் கொடுத்தான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 16)

8. அதன் பின் உங்களில் சிலருக்கு ஆறுதல் தரக்கூடிய அமைதியையும் மற்றும் சிலருக்கு கவலையை உருவாக்கி, தவறான எண்ணங்களையும் கொடுத்தான். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 16)

9. நபியே, நீங்கள் அந்த தவறான எண்ணங்களுடையவர்களிடம் கூறுங்கள், 'நீங்கள் உங்கள் வீட்டில் தங்கி இருந்தபோதிலும், எவர்கள் மீது வெட்டப்பட்டு இறக்க வேண்டுமென்று உள்ளதோ, அவர்கள் தாமாகவே அந்த இடத்திற்கு வந்து வெட்டப்படுவார்கள். அல்லாஹ் உங்கள் மனதை பரிசோதிக்கவும், தூய்மைப்படுத்தவுமே இவ்வாறு செய்தான்'. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 5

**உஹதுப் போரில் ஏற்பட்ட பின்னடைவு மூலம் அல்லாஹ், நயவஞ்சகர்களிடமிருந்து உண்மையான நம்பிக்கையாளர்களை வேறுபடுத்திக் காட்டினான். இரண்டாவது பத்ர் போருக்கான அழைப்பு பற்றிய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுமையுடனும், உறுதியுடனும், அல்லாஹ்வுக்கு அடிபணிந்தும் இருப்பவர்கள் இறுதியில் சொர்க்கத்தில் நுழைவார்கள்.**

## தராவிஹ் - 3: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 3, ஆலிஇம்ரான்; வசனம்: 165 - 200; பிரிவு: 17 - 20

1. **உஹது போர், உண்மை விசுவாசிகளையும், நயவஞ்சகர்களையும் பிரித்துக் காட்டியது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 17)**

2. **அவர்களில் இருந்தவர்கள், காயமடைந்த பின்னரும், அல்லாஹ்வின் தூதரின் அழைப்பை ஏற்று, அல்லாஹ்வின் பாதையில் நன்மை செய்த இத்தகையோருக்கு மகத்தான நற்கூலி உண்டு. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 18)**

3. **எதிரிகள் பெரும் படையை வைத்திருந்தாலும், அது விசுவாசிகளின் ஈமானைப் பெருக்கி வலுப்படச் செய்தது. அவர்கள், “அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். அவனே எங்களுக்குச் சிறந்த பாதுகாவலன்” என்று கூறினார்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 18)**

   **அவர்களை பயமுறுத்தியது ஷைத்தான்தான். (உஹத் போருக்கு பின் ஒரு வருடம் கழித்து நடந்த, 'சின்ன பத்ர்' என்ற நிகழ்ச்சியின் குறிப்பு. குரைஷிகளின் (மனித) ஷைத்தான் ஒருவன், மாபெரும் குரைஷிப்படைகள் பத்ரு நோக்கி வருகிறது என முஸ்லிம்கள் மத்தியில் பயத்தை உருவாக்கினான். அப்போது சில முஸ்லிம்கள் பயந்த நிலையில், நபி (ஸல்) அவர்கள் "தேவைப்பட்டால் நான்**

மட்டும் தனியே செல்வேன்" என கூறினார்கள். 1500 படை வீரர்களுடன் நபியவர்கள் பத்ரை நோக்கி சென்றார்கள். ஆனால், எதிரிகளுக்கு துணிச்சல் இல்லாததால் யாரும் வரவில்லை. நபிகளின் படை அல்லாஹ்வின் அருளுடன் மதீனாவுக்கு திரும்பியது). (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 18)

4. பூமியின் எந்த உயிரும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். அவர்களுக்குரிய கூலி மற்றும் தண்டனை மறுமையில் உள்ளது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 19)

5. எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கம் செல்கிறாரோ, அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கக்கூடிய அற்ப இன்பத்தைத் தவிர வேறில்லை. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 19)

6. அறிவுடையோர்கள் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், சாய்ந்த நிலையில் இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள். பின்பு 'ரப்பான' என தொடங்கும் மிக அருமையான 5 துஆக்கள் (வசனங்கள் 191 முதல் 194 வரை) உள்ளது. (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 20)

7. இறைவன் அவர்களுடைய இப்பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு கூறுகிறான்: "உங்களில் ஆணோ, பெண்ணோ எவர் (நற்செயல் செய்தாலும்) அவர் செய்த செயலை நிச்சயமாக வீணாக்க மாட்டேன். நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தாம். எனவே யார் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறினார்களோ, மேலும் வெளியேற்றப்பட்டார்களோ, மேலும் என் பாதையில் துன்பப்பட்டார்களோ, மேலும் போரிட்டார்களோ, மேலும் (போரில்) கொல்லப்பட்டார்களோ, அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டும் நிச்சயமாக அகற்றி விடுவேன். இன்னும் அவர்களை எவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றனவோ அந்தச் சுவனபதிகளில் நிச்சயமாக நான் புகுத்துவேன்". இது அல்லாஹ்விடமிருந்து (அவர்களுக்குக்) கிட்டும் சன்மானமாகும். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 20)

8. விசுவாசிகளே! நீங்கள் பொறுமையை கடைபிடியுங்கள். (இன்னல்களை) சகித்துக் கொள்ளுங்கள். (ஒருவரை ஒருவர்) பலப்படுத்திக்கொள்ளுங்கள். அல்லாஹ்விற்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இம்மை, மறுமைகளில் வெற்றி அடைவீர்கள். (ஸூரா - ஆலிஇம்ரான்; பிரிவு: 20)

----------------------------------------